**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவினாசி**

**முன்னிலை: திரு.எஸ்.வடிவேல், பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவினாசி**

**2023 ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 02–ஆம், நாள் திங்கட்கிழமை**

**இடைநிலை மனு எண்.865/2022**
**இன்**
**அசல் வழக்கு எண்.77/2011**

1.பூவாத்தாள்

2.கோவிந்தசாமி

3.பி.பி.சாந்தி

... மனுதாரர்கள்/6,9,12 ம்
பிரதிவாதிகள்

**.. எதிர் ..**

பேச்சியம்மாள்

...எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு இறுதியாக 06.12.2022ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் எஸ்.கார்த்திக் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஏ.ஆறுமுகம் அவர்கள் ஆஜராகியும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**<u>உத்தரவு</u>**

கடந்த 08.07.2011 ம் தேதி மனுதாரர்/6 & 9 பிரதிவாதிகள் மற்றும் கடந்த 22.10.2018 ம் தேதி 12 ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பித்த ஒருதலைப்பட்ச உத்திரவினை ரத்து செய்ய வேண்டி கட்டளை 9 விதி 7 உரிமையியல் நடைமுறை சட்டத்தின்படி, மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) <u>மனுதாரர்கள் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம் பின்வருமாறு</u>:-**

மனுதாரர்கள் தங்களுடைய மனுவில் எதிர்மனுதாரர் ஏற்கனவே தன்னுடைய பங்கினை தன்னுடைய சகோதரர் முத்துசாமி மற்றும் சுப்பிரமணியம் ஆகியோர்களுக்கு விடுதலை எழுதி கொடுத்து விட்டதாகவும் அவர்கள் இந்த அசல் வழக்கில் ஒன்று முதல் ஐந்து பிரதிவாதிகளாக உள்ளார்கள் என்றும் எதிர்மனுதாரருக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றும் மேற்கண்ட விபரங்களை மறைத்தும் ஆவணங்களை மறைத்தும் இந்த வழக்கினை தொடர்ந்து உள்ளதாகவும் ஒரு தலைப்பட்ச உத்தரவை குறித்து தெரிந்த உடனே இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும் வயது முதிர்வில் வரும் நோய்கள் காரணமாக மனுதாரரால் நீதிமன்றத்தில் ஆஜராக முடியவில்லை என்றும் மனுதாரர்களுக்கு எதிராக கடந்த 8.7.2011 மற்றும் 22.10.2018 ஆகிய தேதிகளில் பிறப்பித்த ஒருதலைபட்ச உத்தரவினை நீக்கரவு செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) <u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்:-</u>**

எதிர்மனுதாரர் தன்னுடைய எதிர் மனு உரையில், இந்த தாவாவானது கடந்த 2011 ஆம் வருடம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து இதுனால் வரை விசாரணையில் இருந்து

வரும் நிலையில் மனுதாரர்கள் வேண்டுமென்றே காலம் தாழ்த்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் எவ்வித முகாந்திரமும் இல்லாமல் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும் இம்மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வேண்டப்பட்டுள்ளது.

4) மனுதாரர்கள் தரப்பு வாதம் கேட்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்புக்கு வாதத்தை முன்வைக்க போதுமான வாய்ப்பு கொடுத்த பிறகும் எதிர்மனுதாரர் தரப்பில் வாதத்தை முன்வைக்க முன் வராததால் எதிர்மனுதாரர் தரப்பு வாதம் முடிக்கப்பட்டுள்ளது. எழுத்து மூலமாக வாதத்தை தாக்கல் செய்ய மூன்று நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ள போதிலும் எதிர்மனுதாரர் தரப்பில் எழுத்து மூலமாக வாதத்தையும் முன்வைக்கவில்லை. மனு மற்றும் மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள பிரமாண வாக்கு மூலத்தை கவனமாக பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் கருத்தில் எடுத்துக் கொண்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர் மனு உரையை இந்நீதிமன்றம் கருத்தில் எடுத்துக் கொண்டுள்ளது.

**5) இம்மனு அனுமதிக்கப்பட வேண்டுமா இல்லையா? என்பதே தீர்மாணிக்கப்பட வேண்டிய விஷியமாகும்.**

5.1.) வழக்கு கோப்பினை கவனமாக பரிசீலனை செய்து பார்க்கையில் இந்த அசல் வழக்கானது எதிர்மனுதாரரால் மனுதாரர்களுக்கு எதிராகவும் மற்ற பிரதிவாதிகளுக்கு எதிராகவும் பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்யப்பட்டிருப்பதை அறிய முடிகிறது. வழக்கு விசாரணை தற்போது வாதி தரப்பில் சாட்சிய விசாரணைக்காக நிலுவையில்

உள்ளது. வாதி தரப்பில் எதிர்மனுதாரர் பேச்சியம்மாள் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மனுதாரர்கள் தரப்பில் முன் வைத்துள்ள வாதமானது எதிர்மனுதாரர் ஏற்கனவே தன்னுடைய பங்கினை விடுதலை எழுதிக் கொடுத்து விட்டதாகவும் எதிர்மனுதாரருக்கு தற்போது தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றும் மனுதாரர்கள் வயது முதிர்வின் காரணமாக நீதிமன்றத்தில் குறிப்பிட்ட தேதியில் ஆஜராக முடியவில்லை என்றும் மனுதாரர்களுக்கு தங்களது வழக்கினை முன்வைக்க ஒரு வாய்ப்பு வழங்க வேண்டும் என்றும் வேண்டப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர் மனு உரையில் மனுதாரர்கள் வேண்டுமென்றே வழக்கினை கால தாமதம் செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் 2011 இல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கில் காலம் கடந்து மனுவினை தாக்கல் செய்துள்ளதால் இம்மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வேண்டப்பட்டுள்ளது.

5.2.) வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில் அசல் வழக்கின் 6, 9 பிரதிவாதிகளாக உள்ள 1,2 இரண்டு மனுதாரர்களுக்கு எதிராக கடந்த 8.7.2011 தேதியில் ஒரு தலைபட்ச உத்தரவும் 3–ம் மனுதாரருக்கு எதிராக கடந்த 14.02.2019 தேதியிலும் ஒரு தலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதை அறிய முடிகிறது. மனுதாரர்களுக்கு இயற்கை நீதியின் அடிப்படையில் அவர்களது வழக்கினை முன் வைக்க ஒரு வாய்ப்பு வழங்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இந்த அசல் வழக்கானது 2011–ல் தாக்கல் செய்யப்பட்டு சுமார் 12 ஆண்டுகளாக நிலுவையில் உள்ள நிலையில் காலம் கடந்து இம்மனுவினை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளதால்

எதிர்மனுதாரருக்கு செலவுத் தொகை கொடுக்க வேண்டும் என்ற முன் நிபந்தனையுடன் இம்மனுவினை அனுமதிப்பது உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** மனுதாரர்கள் ரூபாய் 7500–ஐ வரும் 09.01.2023 தேதிக்குள் எதிர்மனுதாரருக்கு செலுத்த வேண்டும் என்றும் தவறும் பட்சம் மனு தள்ளுபடி செய்யப்படும் என்ற முன் நிபந்தனையுடன் மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**அழைக்க 09.01.2023**

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிறகு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் 02.01.2023 அன்று அவையறிய பகரப்பட்டது.

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2023.01.02 20:36:28 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி.**

**பிற்சேர்க்கை : இல்லை**

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2023.01.02 20:36:44 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி.**

இ.நி.ம.எண்.865/2022
இன்
அ.வ.எண்.77/2011
சீரான/வரைவு உத்தரவு
நாள்.02.01.2023
மா.உ.நீ., அவிநாசி